## 08: பாண்டுவாசுதேவா முடிசூடல்

தன்னுடைய ஆட்சியின் கடைசி கால கட்டத்தில் இருந்த மன்னன் விஜயா யோசனை செய்தார் 'எனக்கு வாரிசு என கூறிக் கொள்ள எந்த மகனும் இல்லை. நான் இறந்து விட்டால் இந்த நாடு பல்வேறு பிரச்சனைகளில் மூழ்கி விடும். ஆகவே என்னுடைய சகோதரனான சுமித்தாவை இங்கு அழைத்து அவனிடம் ஆட்சியை ஒப்படைப்பதை விட வேறு வழியே இல்லை.' தன்னுடைய அமைச்சர்களுடன் தீவீரமாக ஆலோசனை செய்த பின் மன்னன் விஜயா தன் சகோதரனுக்கு அது குறித்து கடிதம் எழுதி அனுப்பிய சில நாட்களிலேயே அவர் மரணம் அடைந்து விட்டார்.

அந்த மன்னன் இறந்து ஒரு வருடத்திற்கு ஸ்ரீலங்கா எந்த மன்னனின் ஆட்சிமையிலும் இல்லை. விஜயனின் அமைச்சரைவையே உபாதிசாகம் (*Upatissagama*) என்ற இடத்தில் இருந்தவாறு கூட்டுப் பொறுப்பில் இராஜ்ய பரிபாலனம் செய்து கொண்டு வந்தது.

அதற்கு முன் அங்கு சிஹாபுராவில் இருந்த சிஹபாபுவின் மரணத்திற்குப் பிறகு அவருடைய மகனான சுமிதா ஆட்சியில் அமர்ந்தார். அவருக்கு தற்பொழுதைய சென்னை நகரமான மத்தா (*madda*) என்ற இடத்தில் ஆட்சி செய்து வந்த மன்னனின் மகள் மூலம் மூன்று பிள்ளைகள் பிறந்து இருந்தனர். சிஹாபுராவிற்கு விஜயனின் கடிதத்துடன் வந்த தூதுவர்கள் (*Sihapura*) கொடுத்த கடிதத்தை படித்தவர் தன்னுடைய மூன்று பிள்ளைகளையும் அழைத்துக் கூறினார்

உங்களில் எவராவது முன் வந்து என்னுடைய சகோதரர் ஆண்ட அற்புத பூமியான ஸ்ரீலங்காவிற்குச் சென்று அவருடைய மறைவிற்குப் பின் அந்த ஆட்சியை ஏற்றுக் கொள்ள வேண்டும்'.

அந்த மன்னனின் இளைய புதல்வர் பாண்டுவாசுதேவா என்பவர் (*Panduvasudeva*) யோசித்தார் 'நான் அங்கு சென்று ஆட்சிப் பொறுப்பை ஏன் ஏற்கக் கூடாது?' அதன்படி தன் தந்தையின் ஆட்சியில் அமைச்சர்களாக இருந்தவர்களுடைய முப்பத்தி மூன்று மகன்களை தன்னுடன் அழைத்துக் கொண்டு ஆண்டிப் பண்டாரங்களைப் போல வேடம் அணிந்து கொண்டு அந்த ஊருக்கு கிளம்பினார். தற்பொழுதைய மன்னார் பகுதியில் இருந்த மஹாகண்டாரா (*Mahakandara*) என்ற நதிக் கரையில் இருந்த இடத்தை சென்றடைந்த பொழுது அவர்களை உள்ளூர் மக்கள் மிக அன்புடனும் மரியாதையுடனும் வரவேற்றனர்.

தேவதைகள் (*devatas*) பின் தொடர்ந்து வர, உபாதிசாகமா (*Upatissagama*) என்ற இடத்தை அவர்கள் வந்தடைந்தனர். அதற்கு முன் அங்கிருந்த அமைச்சர்கள் ஒரு ஜோதிடரிடம், இந்த நாட்டை ஆளப்போகும் இளவரசர் எப்பொழுது வருவார் என்ற ஆலோசனையில் ஈடுபட்டிருந்தனர். ஜோதிடரும் 'இந்த நாட்டை ஆள் ஏழு நாட்களில் புயல் போல ஒருவர் வந்து புத்த சம்ராஜ்யத்தை நிறுவ இருக்கின்றார்' என கணித்துக் கூறினார். அவர் கூறியபடியே மாறு வேடத்தில் எழாவது நாளன்று ஊருக்குள் நுழைந்த ஆண்டிப் பண்டாரங்களிடம் அவர்கள் அங்கு வந்ததின் காரணத்தைக் கேட்டறிந்து அவர்களை யார் எனவும் அடையாளம் கண்டு கொண்டு

அவர்களை அன்புடன் அழைத்து ஆட்சியை ஏற்குமாறு கூறினாலும் முடிசூட்டு விழாவை உடனடியாக வைத்துக் கொள்ள முடியாமல் போனதின் காரணம் அவருக்குத் திருமணம் ஆகவில்லை.

சச்க அமிதோதனா (*Sakka Amitodana*) என்பவரின் பிள்ளை சக்க பாண்டு என்பவர் (*Sakka Pandu*) புத்தரின் மரணத்திற்கு முன் கோசலா நாட்டு மன்னனினால் ஆட்சி மாறப் போகிறது என்பதை அறிந்து கொண்டதும், தன்னுடைய ஆதரவாளர்களை அழைத்துக் கொண்டு கங்கைக் கரையின் மறு பகுதிக்குச் சென்று அங்கிருந்த ஒரு நகரத்திற்கு மன்னனாக முடிசூட்டிக் கொண்டார். அவருக்கு மூன்று மகன்கள் பிறந்தனர்.

அவருடைய கடைசிப் பெண்ணின் பெயர் பத்தகாச்சனா (*Bhaddakaccana*) என்பது. தங்கம் போன்று மின்னிய பேரழகியான அவள் மீது ஆசை கொண்டு அவளை மணம் செய்து கொள்ள விரும்பிய ஏழு மன்னர்கள் பாண்டுவிற்கு பரிசுகளை அனுப்பினர். ஆனால் அந்த மன்னர்களினால் ஆபத்து ஏற்படலாம் என்பதினாலும், அவளுக்கு அங்கு திருமணம் நடந்தால் அவனுடைய ஆட்சி கவிழ்ந்து விடும் என ஜோதிடர்கள் கூறி இருந்ததினாலும் அவளுடன் முப்பத்தி இரண்டு பெண்களை ஒரு கப்பலில் ஏற்றி கங்கை நதியில் அனுப்பி விட்டான். ‘எவருக்கு விருப்பமோ அவர்கள் தன்னுடைய பெண்ணை மணந்து கொள்ளலாம்’ எனவும் அறிவிப்பு செய்தான். பரிசுகளை அனுப்பிய மன்னர்களினால் கப்பலை கைப்பற்ற முடியவில்லை.

கப்பல் இரண்டாம் நாளன்று மஹாகண்டார நதிக்கரைக்கு

அருகில் இருந்த கோனகமாகா (*Gonagamaka*) என்ற இடத்தை சென்றடைய அங்கு இறங்கியவர்கள் கன்யாஸ்திரீகளைப் போல தம்மை உரு மாற்றிக் கொண்டு அந்த ஊரின் தலை நகரமான உபத்திகசாமா என்ற அந்த ஊரை அடைந்தனர். அவர்களுக்குத் தெரியாமல் தேவதைகள் அவர்களைப் பாதுகாக்க பின் தொடர்ந்து வந்திருந்தனர்.

வந்திறங்கிய அவர்களை ஒரு மந்திரி அடையாளம் கண்டு கொண்டு மன்னனிடம் அழைத்துச் சென்றார். அனைத்து மந்திரிகளும் ஜோதிடர்களுடன் கலந்தாலோசனை செய்து பாண்டுவாசுதேவாவை அவளுக்கு மணமுடித்து வைத்து முடிசூட்ட பாண்டுவாசுதேவாவின் ஆசையும் நிறைவேறியது.

பத்தகாச்சனா மணந்து கொண்டு அவளுடன் வந்திருந்த பெண்களுக்கும் மணமுடித்து வைத்தப் பின் அந்த நகரை பாண்டுவாசுதேவா மிகவும் மகிழ்சியுடன் ஆண்டு வந்தார்.

புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் எட்டாம் பாகமான ‘பாண்டுவாசுதேவாவின் முடிசூட்டு விழா’ இப்படியாக நிறைவுற்றது.